DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 6/2023 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | **பொன்மலர்** |
| Husband Name | : | **பிரபாகரன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1 மற்றும் 3 வது எதிரிகள் ஆஜர். 2-ம் எதிரி இறப்பு)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 07.04.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது எம்.கோவில்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 18.04.2015 ம் தேதி நானும் எனது தம்பி ராஜேஷ் என்பவரும் ஹீரோ ஹோண்டா இருசக்கரவாகனத்தில் என் அம்மா வீடான நாட்டார்மங்கலத்திற்கு சென்று கொண்டிருந்தபோது மருதுடைய அய்யனார் கோவில் முன்பாக நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது எங்களுக்கு பின்னால் இருசக்கரவாகனத்தில் வந்த மூன்று நபர்கள் நான் கழுத்தில் அணிந்திருந்த இரண்டு செயின்களை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அதில் ஒரு செயின் 2 பவுன், மற்றொரு செயின் நான்அணிந்திருந்த 7 பவுன் தாலி செயின் ஆகும்.

2. அப்போது அந்த தாலி செயினிலிருந்த டாலர் மற்றும் தாலி மட்டும் என் கையில் வந்துவிட்டது. மேற்படி சம்பவம் குறித்து நான் திருப்பத்தூர் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார்மனுவை நான் எழுதவில்லை. நான் சொன்னதை ஊர்க்காரர் எழுதிக்கொடுத்ததில் கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த **புகார் மனு அ.த.சா.ஆ.1** ஆகும்.

3. 1 மாதம் கழித்து என்னிடமிருந்து அந்த நபர்கள் பறித்த செயின்களில் 2 பவுன் எடைகொண்ட செயினையும், மூன்று மாதம் கழித்து 7 பவுன் எடையுள்ள செயினையும் கைப்பற்றியதாக போலிசாரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மேற்படி தங்க செயின்களை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களிலுள்ள செயின்கள் தான் என்னிடமிருந்து சம்பவம் சமயம் பறிக்கப்பட்டதாகும். அந்த செயின்களை காட்டக்கூடிய **புகைப்படங்கள் அ.த.சா.ஆ.2 (2 எண்ணிக்கை)** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1மற்றும் 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவத்தை பற்றி முதலில் காவல்நிலையம் சென்று தகவல் சொன்னது யார் என்றால் நான்தான். மேற்படி காவல்நிலையம் செல்லும் போது யார் யார் உடன் வந்தார்கள் என்றால் நானும் எனது தம்பியும் சென்றோம். காவல்நிலையத்திற்கு சென்று மூன்று நபர்கள் எனது செயினை பறித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்று தகவலை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அ.த.சா.ஆ.1 புகார்மனுவை நான் எழுதவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.1 புகார்மனுவை யார் எழுதியது என்றால் எங்கள் ஊர் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன் ஆவார். நான் காவல்நிலையம் செல்லும் போது ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன் வந்தாரா என்றால் இல்லை.

2. எவ்வளவு நேரம் கழித்து ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன் வந்தார் என்றால் சுமார் 1 மணி நேரம் கழித்து வந்தார். அ.த.சா.ஆ.1 புகார்மனுவில் உள்ள விபரத்தில் நகை காணாமல் போய்விட்டதாக கூறினேன் மற்ற ஏனைய விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சம்பவத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் மருத்துவமனை சென்றேனா என்றால் செல்லவில்லை. அ.த.சா.ஆ.1 புகார்மனு கொடுத்த பிறகு போலிசார் தனியாக விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் இல்லை.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.07 17:22:46 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**